


**25. 06. 2025**

<u>தலைப்பு செய்திகள்</u>

1. அரசியல் அமைப்பு சட்டத்தின் கொள்கைகளை வலுப்படுத்தி, ஒருங்கிணைந்து செயலாற்ற அரசு உறுதிபூண்டிருப்பதாக பிரதமர் திரு.நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.

2. **Axiom**-4 விண்கலம் மூலம் குரூப் கேப்டன் சுபான்ஷூ சுக்லா உட்பட 4 விண்வெளி வீரர்கள் ஃப்ளோரிடா விண்வெளி மையத்தில் இருந்து சர்வதேச விண்வெளி மையம் புறப்பட்டு சென்றனர்.

3. வேலூரில் 198 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்ட அரசு பல்நோக்கு உயர்சிறப்பு மருத்துவமனையை முதலமைச்சர் திரு.மு.க. ஸ்டாலின் சற்றுமுன் திறந்துவைத்தார்.

4. கடல்வழி பாதுகாப்பை உறுதி செய்யும் இரண்டு நாள் சிறப்பு ஒத்திகை பயிற்சி தமிழக கடற்பகுதிகளில் இன்று தொடங்கியுள்ளது.

5. **U.S Open** பேட்மிண்டன் மகளிர் இரட்டையர் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு இந்தியாவின் **Priya, Shruti** இணை முன்னேறியுள்ளது.

இனி விரிவான செய்திகள்

**********

<u>பிரதமர் மிசா</u>

அரசியல் அமைப்பு சட்டத்தின் கொள்கைகளை வலுப்படுத்தி, வளர்ச்சி அடைந்த பாரத பாதையில் ஒருங்கிணைந்து செயலாற்ற மத்திய அரசு உறுதிபூண்டிருப்பதாக பிரதமர் திரு.நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.

அவசர நிலை பிரகடனப்படுத்தப்பட்ட 50 ஆண்டு தினத்தை ஒட்டி பிரதமர் வெளியிட்டுள்ள சமூகவலைதள பதிவில் மிசாவை உறுதியுடன் எதிர்த்து போராட்டத்தில் ஈடுபட்டவர்களை வணங்குவதாக கூறியுள்ளார்.

மிசா காலத்தில் அரசியல் அமைப்பு சட்டத்தின் மதிப்பீடுகள் புறக்கணிக்கப்பட்டு அடிப்படை உரிமைகள் மற்றும் பத்திரிக்கை சுதந்திரம் பறிக்கப்பட்டதாக அவர் குறிப்பிட்டார்.

இந்தியாவின் ஜனநாயக வடிவமைப்பையும், சுதந்திர போராட்ட வீரர்களின் கொள்கைகளையும் பேணி பாதுகாக்க பல்வேறு தரப்பினர் ஒருங்கிணைந்து செயலாற்றியதாக அவர் எடுத்துரைத்தார்.

இவர்களின் அனைவரது ஒருங்கிணைந்த முயற்சியே மீண்டும் ஜனநாயக ஆட்சி உறுதிசெய்யப்பட்டதோடு தேர்தல் நடத்தப்பட்டதாக பிரதமர் குறிப்பிட்டார்.

**********

<u>மிசா - மத்திய அமைச்சர்கள்</u>

மத்திய அமைச்சர்கள் திரு.அமித்ஷா, திரு.ராஜ்நாத்சிங், திரு.ஜே.பி.நட்டா உள்ளிட்டோரும் அவசர நிலை பிரகடணம் நாட்டின் இருண்ட காலம் என்று கூறியுள்ளனர்.

மிசா காலம் குறித்து இளையோர் அறிந்துகொள்வதற்காக இத்தினம் கடைபிடிக்கப்படுகிறது.

**********

<u>அமித்ஷா</u>

இதனிடையே பிரதமர் எழுதிய **The Emergency diaries** புத்தகத்தை மத்திய உள்துறை அமைச்சர் திரு.அமித்ஷா புதுதில்லியில் இன்று வெளியிடுகிறார்.

மிசா கால அனுபவங்களை இந்த புத்தகம் விவரிப்பதாகவும் ஜனநாயக கோட்பாடுகளுக்கான தனது போராட்டத்தை இந்த புத்தகம் விவரிப்பதாகவும் பிரதமர் தெரிவித்துள்ளார்.

அவசர நிலை காலத்தின்போது அதற்கு எதிரான இயக்கம் தமக்கு பல்வேறு பாடங்களை பயிற்றுவித்ததாக கூறிய பிரதமர் ஜனநாயக கட்டமைப்பை பேணி பாதுகாப்பதன் அவசியத்தை இந்த காலம் தமக்கு வலியுறுத்தியதாக பிரதமர் குறிப்பிட்டார்.

மிசா கால கட்டத்தில் பாதிக்கப்பட்ட குடும்பங்கள் தங்களது அனுபவங்களை பகிருமாறு பிரதமர் தமது சமூகவலைதள பதிவில் கூறியுள்ளார்.

**********

<u>விண்வெளி</u>

**Axiom**-4 புதிய **Space X Dragan** விண்கலம் மூலம் குரூப் கேப்டன் சுபான்ஷு சுக்லா உட்பட 4 விண்வெளி வீரர்கள் ஃப்ளோரிடா கென்னடி விண்வெளி தளத்தில் இருந்து சர்வதேச விண்வெளி மையத்திற்கு இன்று புறப்பட்டு சென்றனர்.

இந்த விண்கலம் நாளைமாலை நான்கரை மணிக்கு சர்வதேச விண்வெளி நிலையத்துடன் இணையும்.

அதனை தொடர்ந்து விண்வெளி வீரர்கள் இரண்டு வாரங்கள் அங்கு தங்கியிருந்து நுண் ஈர்ப்பு ஆராய்ச்சிகள், தொழில்நுட்ப பரிசோதனைகளை மேற்கொள்ள உள்ளனர்.

31 நாடுகளின் 60 தொழில்நுட்ப ஆய்வுகள் குறித்து இக்குழுவினர் ஆராய உள்ளனர்.

சென்ற மாதம் 29ஆம் தேதி நடைபெறுவதாக இருந்த விண்வெளி பயணம் தொழில்நுட்ப காரணங்களால் ஒத்திவைக்கப்பட்டது.

40 ஆண்டுகளுக்கு பின்னர் முதல்முறையாக இந்திய வீரர், ஒருவர் சர்வதேச விண்வெளி பயணம் மேற்கொள்வது குறிப்பிடத்தக்கது.

**********

<u>விண்வெளி - ஷுக்லா</u>

இதனிடையே இந்த விண்வெளி பயணம் அற்புதமாக உள்ளதாக கேப்டன் ஷுக்லா செய்தி அனுப்பியுள்ளார்.

41 ஆண்டுகளுக்கு பின்னர் இந்தியா விண்வெளியில் உள்ளதாகவும்,

பூமியை வினாடிக்கு ஏழரை கிலோ மீட்டர் வேகத்தில் சுற்றுவதாகவும் தேசிய கொடி தன் தோளில் பெருமையுடன் வீற்றிருப்பதாகவும் எடுத்துரைத்தார்.

இப்பயணம் விண்வெளி மையத்திற்கானது மட்டுமல்ல இந்தியாவின் விண்வெளி மனித பயண திட்டத்தின் தொடக்கமாகும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

**********

<u>பிரதமர் வாழ்த்து</u>

இதனிடையே இந்தியா ஹங்கேரி போலந்து அமெரிக்காவை சேர்ந்த விண்வெளி வீரர்களுடன் **Axiom-4** விண்கலம் வெற்றிகரமாக விண்ணில் செலுத்தப்பட்டதற்கு பிரதமர் திரு.நரேந்திரமோடி பாராட்டு தெரிவித்துள்ளார்.

சர்வதேச விண்வெளி மையத்திற்கு செல்லும் குரூப் கேப்டன் சுபான்ஷு சுக்லா 140 கோடி இந்தியர்களின் நம்பிக்கையையும் விருப்பங்களையும் வாழ்த்துக்களையும் தன்னகத்தே சுமந்து செல்வதாக பிரதமர் தமது வாழ்த்து செய்தியில் கூறியுள்ளார்.

**********

ஜிதேந்திராசிங்

இந்நிலையில் மத்திய அறிவியல் தொழில்நுட்பத்துறை அமைச்சர் டாக்டர் ஜிதேந்திராசிங் வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில் குரூப் கேப்டன் சுபான்ஷு ஷுக்லா தமது விண்வெளி பயணத்தின் ஒருபகுதியாக 7 நுண் ஈர்ப்பு பரிசோதனைகளை தனிப்பட்ட முறையில் மேற்கொள்ள இருப்பதாக கூறினார்.

மின்னணு காட்சியின் மூலம் மனிதர்களுடன் கலந்துரையாடல், வளர்ச்சி மற்றும் உணவு பயிர் விதைகளின் உற்பத்தி போன்றவற்றில் நுண் ஈர்ப்பின் தாக்கம் உள்ளிட்டவை இதில் அடங்கும்.

1984ஆம் ஆண்டு ஏப்ரல் 3ஆம் தேதி சொயஸ்-T 11 விண்கலம் மூலம் விண்வெளி மையத்திற்கு சென்று 7 நாட்கள் தங்கியிருந்த நாட்டின் விமான படை வீரர் கமாண்டர் ராகேஷ் ஷர்மாவின் சாதனைக்கு அடுத்த படியாக குரூப் கேப்டன் சுபான்ஷு ஷுக்லாவின் விண்வெளி பயணத்தின் மூலம் மீண்டும் சாதனை படைக்கப்படும்.

**********

ராஜ்நாத்சிங்

சீனாவின் க்விங்டோவில் ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் பாதுகாப்பு அமைச்சர்கள் கூட்டத்தில் மத்திய பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு.ராஜ்நாத்சிங் இன்று பங்கேற்கிறார்.

இந்த மாநாட்டில் பங்கேற்கும் ஷாங்காய் அமைச்சர்களுடன் இருதரப்பு பேச்சுவார்த்தைகள் மேற்கொள்ளப்படும் என்று கூறியுள்ள அவர் உலக அமைதி மற்றும் பாதுகாப்பிற்கான இந்தியாவின் விருப்பத்தை எடுத்துரைப்பதை தாம் ஆவலுடன் எதிர்நோக்கி உள்ளதாக அவர் கூறினார்.

ஷாங்காய் ஒருமைப்பாட்டுணர்வை முன்னெடுத்துச்செல்வது என்பதை கருப்பொருளாக கொண்டு இந்த மாநாடு நடைபெறுகிறது.

**********

முதலமைச்சர்

வேலூரில் 198 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்ட அரசு பல்நோக்கு உயர்சிறப்பு மருத்துவமனையை முதலமைச்சர் திரு.மு.க. ஸ்டாலின் சற்றுமுன் திறந்துவைத்தார்.

560 படுக்கைகள், 11 அறுவை சிகிச்சை அரங்குகள்,

மகப்பேறு அவசர சிகிச்சை பிரிவு,

கிருமி நீக்க சேவை துறை உள்ளிட்ட பல துறைகளுடன் இந்த கட்டடம் அமைக்கப்பட்டுள்ளது.

தொடர்ந்து 7 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சேர்காடு, திருவளம், ஒடுக்கத்தூர், ஊசூர், பொன்னை, தொரப்பாடி, பேரணாம்பட்டு, அணைக்கட்டு பகுதிகளில் கட்டப்பட்டுள்ள ஆரம்ப சுகாதார நிலையங்களின் கட்டிடங்களையும் முதலமைச்சர் தொடங்கிவைத்தார்.

முன்னதாக ரயில் மூலம் காட்பாடி ரயில்நிலையத்திற்கு வந்த முதலமைச்சருக்கு சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது.

**********

கே.என்.நேரு

திருச்சி மாவட்டம் துறையூரில் 108 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான புதிய காவிரி கூட்டுக்குடிநீர் திட்ட பணிகளை மாநில நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் திரு.கே.என்.நேரு இன்று தொடங்கிவைத்தார்.

இந்த புதிய காவிரி கூட்டுக்குடிநீர் திட்டம் துறையூர் மற்றும் சுற்றுவட்டார மக்களின் நீர்தேவையை பூர்த்தி செய்யும் என்றார்.

தொடர்ந்து 11-அரை கோடி ரூபாய் மதிப்பிலான பேருந்து நிலைய விரிவாக்க பணிகளையும் அமைச்சர் துவக்கிவைத்தார்.

இந்நிகழ்ச்சியின்போது துறையூரிலிருந்து பெரம்பலூர் வரை பொருத்தப்பட்டுள்ள உயர் கோபுர சூரிய மின்சக்தி விளக்குகள் உள்ளிட்ட பல்வேறு நல திட்டங்களையும் அமைச்சர் துவக்கிவைத்தார்.

**********

<u>சாகர்கவாச்</u>

நாட்டின் கடல்வழி பாதுகாப்பை உறுதிசெய்யும் சாகர் கவாச் பாதுகாப்பு ஒத்திகை பயிற்சி கடலோர பகுதிகளில் இன்றும் நாளையும் நடைபெறுகின்றன.

கடலோர காவல்படை, கடலோர பாதுகாப்பு குழுமம் மற்றும் காவல்துறையினர் இணைந்து ஈடுபடும் இப்பயிற்சி கன்னியாகுமரி மாவட்டம் ஆரோக்கியபுரம்முதல் நீரோடி வரையிலான கடலோர பகுதிகளில் நடைபெறுவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

வாய்ஸ்

இதேபோல் நாகை மாவட்டம் அக்கரைப்பேட்டை, செருதூர், வெள்ளப்பள்ளம், புஷ்பவனம், நாலுவேதபதி கோடியக்கரை, மணியன்தீவு உள்ளிட்ட பகுதிகளிலிருந்து 70க்கும் மேற்பட்ட காவல்துறையினர் பல்வேறு குழுக்குளாக பிரிந்து ஒத்திகை பயிற்சியில் ஈடுபட்டுள்ளனர்.

திருவாரூர் மாவட்டம் முத்துப்பேட்டையில் தீவிரவாதிகளின் ஊடுருவலை தடுக்கும் வகையிலான ஒத்திகையில் கடலோர பாதுகாப்பு படையினர் ஈடுபட்டுள்ளனர்.

தம்பிகோட்டை, கீழக்காடு பேட்டை, கோபாலசமுத்திரம் உள்ளிட்ட இடங்களில் சிறப்பு சோதனை சாவடிகள் அமைக்கப்பட்டு வாகன சோதனைகளும் மேற்கொள்ளப்பட்டன.

ராமநாதபுரம் மாவட்டம் மண்டபம், தேவிபட்டினம், வாலிநோக்கம், பாம்பன் உள்ளிட்ட கடல் மற்றும் கடலோர பகுதிகளிலும் இந்த ஒத்திகை நிகழ்ச்சி இன்று நடைபெறுகிறது.

**********

<u>இருவரி</u>

தமிழகத்தில் **MBBS, BDS** மருத்துவ படிப்பு மாணாக்கர் சேர்க்கைக்கு விண்ணப்பிக்க இன்று கடைசி நாளாகும்.

திண்டுக்கல் மாவட்டம் நத்தம் சின்னமுளையூரில் நடைபெற்ற சிறப்பு கால்நடை முகாமில் தடுப்பூசி, செயற்கை முறை கருவூட்டல் உள்ளிட்ட சிகிச்சைகள் அளிக்கப்பட்டன.

கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் தேசிய அடையாள அட்டைகள் பெற வரும் 30ம் தேதிக்குள் விவசாயிகள் விண்ணப்பிக்குமாறு ஆட்சித்தலைவர் திரு.பிரசாந்த் கேட்டுக்கொண்டுள்ளார்.

நாமக்கல் மாவட்டத்தில் வட்டார வள பயிற்றுநர்கள், கணினி உதவியாளர் பணியிடங்களுக்காக வரும் 7 ஆம் தேதிக்குள் ஊரக வாழ்வாதார இயக்க அலுவலகத்திற்கு விண்ணப்பிக்கலாம்.

காஞ்சிபுரத்தில் இந்தியன் வங்கி சார்பில் இன்று நடைபெற்ற கடன் வழங்கும் முகாமில் 387 மகளிர் சுயஉதவிக்குழுவினருக்கு 42 கோடி ரூபாய் நிதியுதவி வழங்கப்பட்டது.

வைகை அணை பூர்வீக விவசாய நிலங்களின் பாசனத்திற்காக இன்று திறக்கப்பட்டுள்ள நிலையில் தேனி மதுரை திண்டுக்கல் சிவகங்கை மற்றும் ராமநாதபுர மாவட்ட கரையோர மக்கள் பாதுகாப்பாக இருக்க அறிவுறுத்தப்பட்டுள்ளது.

திண்டுக்கல் மாவட்டம் கொடைக்கானல் பேரீஜம் ஏரிக்கு சுற்றுலா பயணிகள் செல்வதற்கு இன்றுமுதல் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

**********

பேட்மிண்டன்

அயோவா-வில் நடைபெறும் **U.S Open** பேட்மிண்டன் மகளிர் இரட்டையர் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு இந்தியாவின் **Priya, Shruti** இணை முன்னேறியுள்ளது.

முதல் சுற்றில் இந்த இணை அமெரிக்க இணையை 21-15 21-17 என்ற நேர் செட்களில் வென்றது.

ஆடவர் ஒற்றையர் முதல் சுற்றில் இந்தியாவின் மன்னேபள்ளி – ∴பிரான்சின் **Arnaud –**யும்,

ஆயுஷ் ஷெட்டி – டென்மார்க்கின் **Magnus –**யும் இன்று எதிர்கொள்கின்றனர்.

**********